17 செப்டம்பர் '96

# முதலமைச்சர் கலைஞர் அறிக்கை.

## 26-9-2008

ஒரிசா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் கிறித்தவ தேவாலயங்களின் மீது நடைபெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து தமிழகத்திலும் ஆங்காங்கு சில கிறித்தவ ஆலயங்களின் மீது கல்லெறிதல் போன்ற சம்பவங்கள் நடைபெறுவதாக தகவல்கள் வந்துள்ளன. எந்தவிதமான மத மாச்சரியங்களுக்கும் இடமில்லாத வகையில் தற்போது தமிழகம் அமைதியான மாநிலமாக திகழ்வதைக் கண்டு பொறுக்காத ஒரு சிலர் இது போன்ற வன்முறைகள், அராஜகங்களில் யாராவது ஈடுபட்டு, தமிழகத்தில் நிலவிடும் மத நல்லிணக்கத்திற்கும் மனித நேயத்திற்கும் இழுக்கினை ஏற்படுத்துகின்ற வகையில் நடந்து கொள்ள முற்படுவார்களேயானால், அதனை இந்த அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிராது. மேலும் அத்தகைய செயல்களைக் கண்டிப்பாக அனுமதிக்காது என்பதோடு, அதற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தமிழகக் காவல் துறை தனது கடமை உணர்ந்து உடனடியாக சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் தயங்காது என்பதை எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்.<br>
செய்தி, மக்கள் தொடர்புத் துறை<br>
தலைமைச் செயலகம், சென்னை :